# தொடக்கநிலை

# நான்காம் வகுப்பு

# தமிழ்மொழி

# பகிர்வு

**A Garden where Scholars Bloom**

# வாய்மொழித் தேர்வு

A Garden where Scholars Bloom

# வாய்மொழித்தேர்வு

- வாய்விட்டு வாசித்தல்
- பட உரையாடல்

# வாய்விட்டு வாசித்தல்

நோக்கம் :

கொடுக்கப்பட்ட பகுதியைச் சரியான உச்சரிப்புடனும் ஏற்ற தொனியுடனும் சரளமாக வாசிக்கும் திறனைப் பெற்றிருக்க வேண்டும்.

- 10 மதிப்பெண்கள் வழங்கப்படும்

# பட உரையாடல்

- படத்தை விவரித்தல்
- 10 மதிப்பெண்கள் வழங்கப்படும்

- படத்தோடு தொடர்புடைய உரையாடல்
- 10 மதிப்பெண்கள் வழங்கப்படும்

A Garden where Scholars Bloom

# படத்தை விவரித்தல்

- படத்தைப் பற்றி விவரித்துச் சரளமாகப் பேசும்திறனைப் பெற்றிருக்க வேண்டும்.
- படத்தோடு தொடர்புடைய வேறொரு நிகழ்ச்சி அல்லது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளும் திறனை மாணவர்கள் பெற்றிருக்க வேண்டும்.

A Garden where Scholars Bloom

SI LING PRIMARY SCHOOL

strive for progress




A Garden where Scholars Bloom

## படத்தோடு தொடர்புடைய உரையாடல்
## மையத் தூண்டுதல் வினா :

**நீ பெருவிரைவு ரயில்வண்டியில் பயணம் செய்தபோது ஏற்பட்ட ஓர் அனுபவத்தைப் பற்றிச் சொல்.**

கூடுதலான தூண்டுதல் வினாக்கள் :

(அ) நீ பெருவிரைவு ரயில் வண்டியில் எங்கே சென்றாய்?

(ஆ) நீ யாருடன் சென்றாய்?

(இ) பெருவிரைவு ரயில்வண்டியில் பயணம் செய்வது உனக்குப் பிடித்திருக்கிறதா? ஏன்?

(ஈ) பெருவிரைவு ரயில்வண்டியில் பயணம் செய்யும்போது உனக்குப் பிடிக்காத விஷயம் என்று எதைக் கூறுவாய்?

SI LING PRIMARY SCHOOL
strive for progress

# கேட்டல் கருத்தறிதல்

- படங்களைத் தெரிவு செய்தல் (3 கேள்விகள்)
- பனுவலைக் கேட்டு விடையைத் தேர்ந்தெடுத்தல் (7 கேள்விகள்)

A Garden where Scholars Bloom

# கட்டுரை



## முன்னுணர்வுக் கருத்தறிதல்

அன்று ஞாயிற்றுக்கிழமை திரு.மாதவன் ஓய்வாக இருந்தார். அவர் தன் மகனிடம் கூறியபடி அவனைக் கடற்கரைக்கு அழைத்துச் செல்லக் கிளம்பிக்கொண்டிருந்தார்.

திருமதி மாதவன் அவர்களுக்குத் தேவையான 1. (_____) எடுத்து வைத்துக் கொண்டிருந்தார். அப்போது அண்டை வீட்டுக்காரர் திருமதி லீ கதவை 2. (_____). அவர் வருத்தத்தோடு காணப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| 1) பொருள்களை | 2) களைப்பாக | 3) திறந்தார் | 4) வந்தார் |
| 5) சென்றார் | 6) யோசித்தார் | 7) அடித்தார் | 8) கவனித்த |
| 9) தட்டினார் | 10) மகிழ்ச்சியாக | | |

A Garden where Scholars Bloom

SI LING PRIMARY SCHOOL
strive for progress

பாலாவின் அப்பா அவனுக்கு ஒரு கணினியைப் பரிசாகத் தந்திருந்தார். அவனுக்குக் கணினியில் விளையாட அதிக விருப்பம். அன்றும் பாலா வழக்கம்போல பள்ளி முடிந்து வீடு திரும்பினான். அவன் சீருடையை மாற்றாமல் உடனே கணினியில் விளையாட ஆரம்பித்தான். அவன் தன் வீட்டுப்பாடங்களைச் செய்ய மறந்துவிட்டான். இரவு நேரம் வரை விளையாடிக்கொண்டிருந்தான். நீண்ட நேரம் விளையாடியதால் கணினி சூடாக இருப்பதைப் பாலா உணர்ந்தான். அவன் அதை அடைத்துவிட்டுப் படுக்கச் சென்றான்.

Q14. பள்ளி முடிந்து வீட்டுக்கு வந்த பிறகு பாலா என்ன செய்தான்?

1. உணவு உண்டான்
2. சீருடையை மாற்றினான்
3. கணினியில் விளையாடினான்
4. வீட்டுப்பாடங்களைச் செய்தான்

A Garden where Scholars Bloom

அவன் பள்ளிக்குச் செல்ல நேரமாகிவிட்டதால் அம்மா அவனை எழுப்பினார். பாலா அவசர அவசரமாகக் காலைக்கடன்களை முடித்தான். பின் பள்ளிச் சீருடையை அணிந்துகொண்டு விரைவாகப் பள்ளியை நோக்கி ஓடினான். அவனைப் பார்த்த ஆசிரியர் கோபம் அடைந்தார். அவன் தாமதமாக வந்ததற்கான காரணத்தைக் கேட்டார். அவனும் முதல் நாள் தான் செய்ததைக் கூறினான்.

பிறகு, ஆசிரியர் அவனைத் திட்டினார். இனிமேல் இவ்வாறு செய்யக்கூடாது என்றும் கணினியில் அதிக நேரம் விளையாடுவது தீமையை உண்டாக்கும் என்றும் அறிவுரை கூறினார். அன்றிலிருந்து பாலா கணினியில் அதிக நேரம் விளையாடுவதைக் குறைத்துக் கொண்டான். அவன் பள்ளிப் பாடங்களில் அதிகக் கவனம் செலுத்த ஆரம்பித்தான்.

Q 17. பாலா செய்த தவற்றினால் பள்ளியில் அவனுக்கு என்ன நடந்தது என்பதைப்பற்றி விளக்கி உன் நண்பன் ராமுவுக்கு ஒரு குறிப்பு எழுது.

அன்புள்ள ராமு,

பாலா பள்ளிக்குத் தாமதாக சென்றதால்______________________________
____________________________________________________________________________
____________________________________________________________________________
____________________________________________________________________________
____________________________________________________________________________
____________________________________________________________________________

இப்படிக்கு
உன் நண்பன்

## சுயவிடைக் கருத்தறிதல்

கபிலன் தன் தாத்தாவின் வீட்டிற்குச் சென்றான். அப்போது தாத்தா அவர் அறையில் கதைப் புத்தகம் ஒன்றை வாசித்துக்கொண்டிருந்தார். அறையினுள் நுழைந்த கபிலனின் கவனத்தை ஏதோ ஈர்த்தது. அங்கிருந்த அலமாரியில் பல வெற்றிப் பதக்கங்களும் கோப்பைகளும் இருப்பதைப் பார்த்தான். அலமாரியின் அருகே சென்று அவற்றை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தான். தாத்தா மாணவராக இருந்தபோது படிப்பிலும் விளையாட்டிலும் அவருக்குக் கிடைத்தவை அவை. கபிலனுக்கு மிகவும் பெருமையாக இருந்தது. தானும் தன் தாத்தாவைப் போலச் சிறந்து விளங்க வேண்டும் என்று தீர்மானித்தான். "தாத்தா, நான் படிப்பிலும் விளையாட்டிலும் சிறந்து விளங்க என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான்.

1. கபிலன் தாத்தாவைப் பார்க்கச் சென்றபோது அவர் என்ன செய்துகொண்டிருந்தார்?

2. கபிலனின் கவனத்தை எவை ஈர்த்தன?

3. அன்று கபிலன் தன் தாத்தாவைப் பற்றி என்ன அறிந்து கொண்டான் ?

# செந்தமிழும் நாப்பழக்கம்

வானொலி

தொலைக்காட்சி

செய்தி கேட்டல்

நாளிதழ் வாசித்தல்

இணையம்

You Tube

http://sangamam.moe.edu.sg/tamilosai/slot/u113/index.html

https://www.vaandu.sg

# தமிழ்மொழித் தேர்வுத்தாளின் மொத்த மதிப்பெண் விவரம் :

| | | |
|---|---|---|
| 1 | வாய்மொழி | 50 மதிப்பெண்கள் |
| 2 | கேட்டல் கருத்தறிதல் | 20 மதிப்பெண்கள் |
| 3 | கட்டுரை | 40 மதிப்பெண்கள் |
| 4 | மொழி மரபும் கருத்தறிதலும் ( அ / ஆ ) பிரிவுகள் | 90 மதிப்பெண்கள் |
| | மொத்த மதிப்பெண்கள் | 200 மதிப்பெண்கள் |

A Garden where Scholars Bloom

# ஒளிக்காட்சி ஒட்டிய உரையாடல்

- மாணவர்கள் தங்கள் வயதிற்கும்,அனுபவத்திற்கும் ஏற்பப் பல்வேறு சூழ்நிலைக்கேற்ப பேசும் திறமை பெற்றிருக்க வேண்டும்.

- அவர்கள் பேச்சுத்தமிழிலும் பேசலாம். எழுத்துத் தமிழிலும் பேசலாம். பொதுவாக அவர்கள் சிரமமின்றிப் பேசுவதை எதிர்பார்க்கிறோம்.

# சுயவிடைக் கருத்தறிதல் ஒரு கண்ணோட்டம்

A Garden where Scholars Bloom

1. பிரபு தம் ஐம்பதாவது பிறந்தாளின்போது ஏன் சிறுவர் இல்லத்திற்குச் சென்றார் ? ( 3 மதிப்பெண்கள்)

அவருக்குப் பிள்ளைகள் இல்லை. ஆனால் பிள்ளைகள் என்றால் அவருக்குக் கொள்ளை ஆசை. அதனால் பிரபு தம் ஐம்பதாவது பிறந்தாளின்போது அன்பளிப்புகள் கொடுக்கச் சிறுவர் இல்லத்திற்குச் சென்றார்.

Q40. பிரபுவிடம் காணப்படும் உயர்ந்த பண்பை உணர்த்தும் இரண்டு செயல்களைச் சுட்டிக்காட்டி நீ உன் நண்பருக்குக் குறிப்பு எழுது.
(4 மதிப்பெண்கள்)

அன்புள்ள மணி,
திரு பிரபு , அவரின் பிறந்தாளின்போது சிறுவர் இல்லத்திற்குச் சென்று அன்பளிப்புகள் கொடுத்தார். அதுமட்டுமல்ல கபிலன் ஏழ்மையில் வாடியபோது அவனிடம் அன்பு காட்டி ஆதரவு அளித்து படிப்பதற்குப் பொருளுதவியும் செய்தார்.



# நன்றி
# வணக்கம்

**A Garden where Scholars Bloom**